# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## SC.No. 86/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | : | 5 | நாள் | : | 06.11.2024 |
| பெயர் | : | அஜித் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 06th day of November 2024.

எதிரி ஆஜர்.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் வாசுதேவநல்லூர் கலைஞர் காலனியில் வசித்து வருகிறேன். அ.சா.1 என் தயார், அ.சா.2 என் மாமா, அ.சா.3 என் அண்ணன். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் என் மாமா மகன். என்னுடன் பிறந்தவர்கள் இரண்டுபேர். என்னுடன் பிறந்த மற்றொரு சகோதரர் ரஞ்சித் இறந்துபோனார். 21.10.2017 ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் கலைஞர் காலனி பேருந்து நிறுத்தத்தில் வைத்து இறந்துபோனார். ஆஜர் எதிரி என் சகோதரர் ரஞ்சித்தை அரிவாளல் வெட்டி இறந்து போனார். என் அண்ணன் செல்வக்குமார் வெளிநாடு செல்வதற்காக கொடுத்த பணத்தை திரும்ப பெறுவதற்காக என் அம்மாவும் அண்ணன் செல்வக்குமாரும் வாசுதேவநல்லூர்

பிள்ளையார்கோவில் தெருவிற்கு புறப்பட்டுச் சென்றார்கள். ரஞ்சித்தும் அவர்களுடன் சென்றிருந்தார். நான் வாசுதேவநல்லூரில் இருந்து தெற்கிலிருந்து வடக்காக வந்துகொண்டிருந்தேன். ஆஜர் எதிரி அரிவாளுடன் மாரியம்மன்கோவில் அருகில் வரும்போது அவரை நான் பார்த்தேன். அவர் வைத்திருந்த அரிவாளில் இரத்தம் படிந்திருந்தது. நான் எங்கள் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தபோது கலைஞர் காலனி பேருந்து நிறுத்தத்தில் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். அங்கு சென்று பார்த்தபோதுதான் என் அண்ணன் வெட்டுப்பட்டு கிடந்தது தெரியவந்தது. அங்கிருந்து என் அண்ணன் செல்வக்குமார் ரஞ்சித்தை சிவகிரி அரசு மருத்துவமனைக்கு தீயணைப்பு வாகனத்தில் கொண்டு சென்றார். என் அண்ணன் ரஞ்சித் மீது எதிரி மனைவியுடன் தொடர்பு இருப்பதாக எதிரி வருத்தம் கொண்டிருந்தார் என்று கேள்விப்பட்டேன். நான் வீட்டிற்கு சென்று பின்னர் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு 23.10.2017 அன்று மதியம் ரஞ்சித் சிகிச்சை பலனின்றி இறந்துபோனார். அன்று எதிரியை மாரியம்மன்கோவில் அருகே பார்த்தபோது அவர் வைத்திருந்த அரிவாள்தான் சா.பொ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் கு.வி.</u>

நான் சம்பவத்தன்று தெற்கிருந்து வடக்காக வரும் போது சுமார் 10.30 மணி இருக்கும். நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது சம்பவ இடத்தில் ரஞ்சித் இல்லை. தீயணைப்புத் துறையில் இருந்து தூக்கி சென்று விட்டார்கள். கூட்டமாக

இருந்தவர்கள் சொல்லித்தான் என்ன நடந்தது என்று தெரியும். சம்பவத்திற்கு பின்னர் நான் ஊரில் தான் இருந்தேன். 24ம் தேதி அன்று போலீசார் விசாரித்தார்கள்.22ம் தேதியும் திருநெல்வேலி மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அதன்பின்னர் 24ம் தேதி விசாரித்தார்கள். நானாக சென்று போலீசாரிடம் கூறவில்லை போலீசார் தான் என்னை தேடி வந்து விசாரித்தார்கள். சம்பவத்திற்கு பின்னர் நான் ஊரைவிட்டு எங்கும் செல்லவில்லை ஊரில் தான் இருந்தேன். போலீசார் அரிவாளை என்னிடம் காட்டி விசாரிக்கவில்லை. நான் கூறுவது போல் எதிரியை 21.10.2017 அன்று பார்க்கவில்லை என்றும் நான் மேற்கண்ட தினத்தில் அந்த இடத்திலேயே இல்லை என்றால் சரியல்ல. இறந்தவர் என் சகோதரர் என்பதால் என் தாயாருக்காக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் குற்ற செயலுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை

DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

**SC.No. 86/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | : | 4 | நாள் | : | 06.11.2024 |
| பெயர் | : | சிங்கத்துரை | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 06th day of November 2024.

எதிரி ஆஜர்.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் வாசுதேவநல்லூர் தர்மர் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். ஜே.சி.பி ஆப்ரேட்டராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரி என் சித்தப்பா மகன். இறந்து போன ரஞ்சித் என் அத்தை மகன். அ.சா.1 க்கு 3 மகன்கள். சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு தீபாவளிக்கு பின்னர் ரஞ்சித் ஒருநாள் இறந்துபோனார் தேதி ஞாபகமில்லை. அருளாச்சி என்ற ஊரில் நான் இருந்தபோது எனக்கு ரஞ்சித் வெட்டுப்பட்டுவிட்டதாக தகவல் கிடைத்தது. மாரிச்சாமிக்கு திருமணம் ஆகிவிட்டது அவர் மனைவி பெயர் தெரியாது. அவர் மனைவியுடன் வசித்து வருகிறாரா என்று எனக்கு தெரியாது. மறுநாள் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி

மருத்துவமனைக்கு சென்று அவரை பார்த்தேன். ஆஜர் எதிரி அவரை வெட்டியதாக கேள்விப்பட்டேன். அவர்களுக்குள் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. வெட்டுபட்ட மறுநாள் மாரிச்சாமி இறந்துபோனதாக தெரிந்து கொண்டேன். திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை பிணவறைக்கு அருகில் போலீசார் விசாரித்தார்கள். அவர்கள் நடத்திய பஞ்சாயத்தில் நானும் சாட்சியாக கையொப்பமிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

பிரேத விசாரணை செய்த போது நான் பிணவறைக்கு வெளியில் தான் இருந்தேன். அங்கு என்ன விசாரணை நடந்தது என்றும் என்ன முடிவு செய்தார்கள் என்றும் எனக்குத் தெரியாது. எப்படி நடந்தது என்று என்னிடம் ஏதும் கேட்கவில்லை.

**மறு விசாரணை** : இல்லை

DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

**SC.No. 86/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | : | 3 | நாள் | : | 06.11.2024 |
| பெயர் | : | செல்வக்குமார் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 06th day of November 2024.

எதிரி ஆஜர்.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் வாசுதேவநல்லூர் கலைஞர் காலனியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 என் தயார். அ.சா.2 என் மாமா. ஆஜர் எதிரி என் மாமா மகன். என்னுடன் பிறந்தவர்கள் 2 பேர் முதல் சகோதரர் ரஞ்சித் அதையடுத்த இளையவர் அஜித். நான் கோயம்புத்தூரில் டிராவல்ஸ் நடத்திவருகிறேன். நான் 2017 ஆண்டு வாசுதேவநல்லூரில் தங்கி போட்டித் தேர்வுகளுக்காக தயார்படுத்திக்கொண்டிருந்தேன். நான் வேலை கிடைக்காத நிலையில் வெளிநாடு செல்வதற்காக ஏற்பாடு செய்திருந்தேன். வாசுதேவநல்நூரைச் சேர்ந்த பொங்கல் செல்வம் என்பவரிடம் ரூ.1 லட்சம் கொடுத்தேன். அவர் என்னை வெளிநாட்டிற்கு

அனுப்பினார். ஆனால் முறையான விசா இல்லை என்பதால் 3 மாதத்தில் திரும்பிவிட்டேன். முறையான விசா இல்லாமல் என்னை வெளிநாடு அனுப்பியதற்காக பணத்தை திருப்பி கேட்டேன். அதை தருவதாக கூறிவந்தார். 21.10.2017 அன்று அந்த பணத்தை வாங்குவதற்காக எங்கள் தெருவில் இருந்து வாசுதேவநல்லூர் பிள்ளையார்கோவில் தெருவிற்கு செல்வதற்கு புறப்பட்டபோது என் தம்பி முன்னால் சென்று கொண்டிருந்தார். 50 மீட்டர் தொலைவில் பின்னாடி சென்று கொண்டிருந்தேன். என் அம்மாவும் நானும் சென்றோம். கலைஞர் காலனி பேருந்து நிறுத்தம் அருகில் ஆஜர் எதிரி என் தம்பியை அவதூறாக பேசினார் நாங்கள் அருகில் ஓடிச் செல்லும் முன்பாக ஆஜர் எதிரி என் தம்பி ரஞ்சித்தை அரிவாளால் இடது கழுத்தில் வெட்டிவிட்டார். நாங்கள் தடுக்கச் சென்றபோது ஓடிவிடுங்கள் இல்லை என்றால் உங்களையும் வெட்டிவிடுவேன் என்று அரிவாளைக் காட்டி மிரட்டினார். அதற்குள் அங்கு ஆட்கள் கூடியதும் எதிரி இன்று தப்பிவிட்டாய் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று ரஞ்சித்தை பார்த்து கூறிவிட்டு ஓடிவிட்டார். யாரோ தகவல் கூறியதின்பேரில் தீயணைப்பு துறை வாகனம் வந்து என் தம்பியை சிவகிரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பின்னர் அங்கிருந்து திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். நானும் திருநெல்வேலிக்கு சென்றேன். என் தாயார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று தெரிந்து கொண்டேன். இந்த அரிவாள்தான் எதிரி அன்று என் தம்பியை வெட்ட பயன்படுத்தியதாகும் அது சா.பொ.1 ஆகும். என் தம்பி மீது

போர்த்தியிருந்த போர்வையும் அவர் உடுத்திருந்த கைலியும், போர்வையும், கைலியும் சா.பொ.2, 3 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள். திருநெல்வேலி மருத்துவமனையில் வைத்தும் என்னை விசாரித்தார்கள். என் தம்பி அணிந்திருந்த உடைகளை என்னிடம் கொடுத்தார்கள். அதை போலீசாரிடம் கொடுத்தேன். என் தம்பி 23.10.2017 அன்று அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்து போனார். பிரேத விசாரணையின்போதும் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

21.10.2017 அன்று நானும் என் அம்மாவும் வீட்டில் இருந்து புறப்பட்டோம். சம்பவம் பேருந்து நிழற்குடைக்கு உள்ளே நிகழ்ந்தது. அந்த ரோடு தென்வடல் சாலை ஆகும். நிழற்குடை கிழக்கு பார்த்தவாறு அமைந்துள்ளது. நிழற்குடையில் உள்புறம் உள்ள சிமெண்ட் திண்டில் அமர்ந்திருந்த போது சம்பவம் நடந்தது. என் தம்பியின் நேர் எதிரே இருந்து தாக்கப்பட்டுள்ளார். என் தம்பி உட்கார்ந்திருந்த திண்டிற்கும் அதற்கு பின்புறம் உள்ள சுவற்றிற்கும் இடையில் 1 அடி இடைவெளி இருக்கும் என்றால் சரிதான். நான் சுமார் 50 அடி தொலைவில் இருந்து சம்பவத்தை பார்த்தேன். நிழற்குடையின் உள்ளே இருப்பவர்களையும் அங்கு என்ன நடக்கிறது என்று தெற்கிலும், வடக்கிலும் இருந்து பார்க்கமுடியாது என்றால் சரிதான். கிழக்கில் இருந்தால் மட்டும் தான் தாக்குவதை பார்க்கமுடியும் என்றால் சரிதான். வெட்டி வெளியே இழுத்து போடும் போது தான் பார்த்தேன். ரஞ்சித் நான் புறப்படுவதற்கு சுமார் 50 மீட்டர் தொலைவிற்குள்ளாக சென்று கொண்டிருந்தார். 10 மணிக்கு மேல்

பஞ்சாயத்திற்கு செல்வோம் என்று முடிவு செய்திருந்தோம். ரஞ்சித்தும் எங்களுடன் வருவதாகத் தான் கூறியிருந்தார். என் அம்மாவும் என் உடன் வந்தார். அவர் என்ன காரணத்திற்காக பேருந்து நிறுத்தத்தில் அமர்ந்திருந்தார் என்று எனக்குத் தெரியாது. 3 பேரும் சேர்ந்து புறப்படும் போது ஏன் முன்னதாக செல்கிறாய் என்று நான் கேட்கவில்லை.

கேள்வி : மூவரும் ஒன்றாக சேர்ந்து கிளம்பிய பின்னர் ரஞ்சித் முன்னதாகவே சென்று பேருந்து நிறுத்தத்தில் அமர்ந்து கொள்வேன் என்று சொன்னதற்கு மூவரும் கிளம்பிவிட்டோமே மூவரும் ஒன்றாகவே செல்வோம் நீ யாரை பார்க்க வேண்டுமோ அவரைப் பார்த்து விட்டு மூவரும் செல்வோம் என்று நான் ரஞ்சித்திடம் கூறினேனா?

பதில் : நான் பஸ் ஸ்டாப்பில் ஏன் உட்காருகிறாய் என்று கேட்கவில்லை. மூவரும் சேர்ந்தே புறப்பட்டு செல்வோம் என்று கூறவில்லை.

நான் கூறுவது போல் மூவரும் ஒன்றாகச் சேர்ந்து கிளம்பி இருந்தால் எவ்வித சிறப்பான காரணம் இன்றி அவர் பேருந்து நிறுத்தத்தில் உள்ள நிழற்குடையில் அமர அனுமதித்து இருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் அவரிடம் ஏதும் கேட்கவில்லை. சாதரணமாக சகோதரர் ஒருவர் குடும்ப உறுப்பினர்களிடம் இருந்து விலகி தனியே ஒரு இடத்தில் அமரப்போவதாக கூறினால் என்ன காரணம் என்று கூறாமல் அவ்வாறு தனியே அமர்ந்திருக்க அனுமதிக்கமாட்டார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. என் தம்பி சம்பவ தினத்தன்று என்ன கலர் சட்டை அணிந்திருந்தார் என்றால் ஞாபகம் இல்லை. சட்டையில் வெட்டுபட்டிருந்தது.

சிவகிரி மருத்துவமனையில் இருந்து என்னிடம் கொடுக்கவில்லை. சம்பவ இடத்தில் கடைகளும், எதிர்திசையில் வீடும் உள்ளது. அந்த கடைக்காரர்களுக்கும், வீட்டுக்காரர்களுக்கும் சம்பவம் பற்றி தெரியும். என் தம்பி இறப்பதற்கு முன்பாக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். போஸ்ட்மார்டத்திற்கு பின்னரும் போலீசார் என்னை விசாரித்தார்கள். முன்னதாக நான் துணியை ஒப்படைத்த போது விசாரித்தார்கள். துணியை இறந்த பின்பு போலீசாரிடம் கொடுத்தேன். போலீசார் சட்டை பற்றி கேட்டார்கள் சட்டை இல்லை என்று சொன்னேன். சிவகிரி மருத்துவமனையில் கழற்றி போட்டார்கள் என்று சொன்னேன். சிவகிரி மருத்துவமனையில் வைத்து ரஞ்சித் வலிக்கிறது என்று பேசினார். அதன் பின்னர் சுயநினைவு இல்லை. சிவகிரி மருத்துவமனைக்கு நாங்கள் தீயணைப்பு படை வாகனத்தில் கொண்டு சென்றோம். நானும் உடன் சென்றேன். டாக்டர் என்னிடம் எதுவும் கேட்கவில்லை. நான் ரஞ்சித்தின் சகோதரர் என்பது மருத்துவருக்கு தெரியாது. சம்பவத்தின் போது அஜித் வீட்டில் இல்லை. சம்பவம் பற்றி தெரிந்த பின்னர் சிவகிரி மருத்துவமனைக்கு வந்தார். அஜித் சிவகிரி மருத்துவமனைக்கு எப்போது வந்தார் என்று நான் கவனிக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்த போது அரிவாளை காண்பித்தார்களா என்றால் காண்பிக்கவில்லை. இடது கழுத்திலும், தோள் பட்டையிலும், தலையிலும், காலிலும் வெட்டுபட்டிருந்தது. என்னை என் தம்பி இறப்பதற்கு முன்பு விசாரித்தார்கள். 21.10.2017 அன்று நான்சம்பவ இடத்திற்கு சென்றதாக கூறுவதும் , எதிரி என்

தம்பியை தாக்கியதாக கூறுவதும், சம்பவத்தை பார்த்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. இறந்தவர் என் தம்பி என்பதால் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## SC.No. 86/2024

| | | | |
|---|---|---|---|
| அ.சா. | : 2 | நாள் | : 06.11.2024 |
| பெயர் | : கணேசன் | தொழில் | : |
| தந்தை பெயர்/ | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூகா | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 06th day of November 2024.

எதிரி ஆஜர்.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் வாசுதேவநல்லூரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 என் உடன்பிறந்த சகோதரி ஆவார். நான் லாரி டிரைவராக சென்னையில் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 க்கு 3 மகன்கள் செல்வக்குமார், ரஞ்சித், அஜித் ஆவார்கள். ரஞ்சித் இறந்துபோனார். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் என் அண்ணன் மகன். 2017 ம் ஆண்டு தீபாவளிக்கு நான் ஊருக்கு வந்திருந்தபோது ஒருநாள் காலை 11 மணியளவில் எங்கள் ஊரில் உள்ள பிள்ளையார் கோவில் தெருவில் நடந்து கொண்டிருந்த பஞ்சாயத்தில் நான் கலந்துகொண்டு இருந்தபோது என் அக்கா மகனை ஆஜர் எதிரி வெட்டிக் கொன்றுவிட்டதாக கேள்விப்பட்டு கலைஞர் காலனி

பேருந்து நிறுத்தத்திற்கு சென்று பார்த்தபோது அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றுவிட்டதாக சொன்னார்கள். நான் உடனே சிவகிரி அரசு மருத்துவமனைக்கு ஓடிச் சென்று பார்த்தேன். நான் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு செல்லும்போதே அங்கிருந்து திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கொண்டு சென்றுவிட்டதாக சொன்னார்கள். பின்னர் அ.சா.1 ஐ வந்து பார்த்தபோது அவர் காவல் நிலையம் சென்றிருப்பதாக தெரிந்து வாசுதேவநல்லூர் காவல் நிலையம் சென்றேன். அங்கு அ.சா.1 புகார் வாக்குமூலம் கொடுத்தார் அதில் நானும் சாட்சியாக கையொப்பமிட்டேன். நான் சென்னையிலிருந்தபோது எதிரி எனக்கு தொலைபேசியில் இரஞ்சித் எதிரியின் மனைவியுடன் தகாத உறவில் இருப்பதாகவும் கண்டித்து வைக்கும்படியும் சொன்னார். அப்போது ரஞ்சித் சென்னையில் என்னுடன்தான் இருந்தார். 2017 தீபாவளிக்கு இரண்டு நாளுக்கு முன்பு ஊருக்கு வந்திருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் கு.வி.</u>

பிள்ளையார்கோவில் தெருவில் பஞ்சாயத்து பேசிக்கொண்டிருக்கும் போது சம்பவம் குறித்து கேள்விபட்டேன். பொங்கல் செல்வம் என்பவர் செல்வகுமாருக்கு பணம் திரும்ப கொடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் பஞ்சாயத்து. பிள்ளையார்கோவிலில் பஞ்சாயத்து நடந்து கொண்டிருந்த போது தான் தகவல் தெரிந்து வந்து பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன். புகார் வாக்குமூலத்தில் என்ன கூறியுள்ளார் என்று தெரியாது அறிவேன் சாட்சியாக

கையொப்பமிட்டேன். நான் சென்னையில் இருந்த போது எதிரி என்னிடம் தொலைபேசியில் ரஞ்சித் பற்றி புகார் கூறி ரஞ்சித்தை கண்டிக்கும்படி சொன்ன விவரங்களை போலீசார் விசாரணையில் நான் கூறவில்லை. அறிவேன் சாட்சி என அ.சா.ஆ.1ல் இடைச்செருகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் என் சகோதரியுடன் காவல் நிலையம் சென்று புகார்வாக்குமூலத்தில் சாட்சி கையெழுத்து ஏதும் செய்யவில்லை என்றும் இறந்தவர் என் அக்கா மகன் என்பதாலும் புகார்தாரர் என் சகோதரி என்பதாலும் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை

# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## SC.No. 86/2024

| | | | |
|---|---|---|---|
| அ.சா. | : 1 | நாள் | : 06.11.2024 |
| பெயர் | : மாரியம்மாள் | தொழில் | : |
| தந்தை பெயர்/ | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூகா | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 06th day of November 2024.

எதிரி ஆஜர்.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

முதல் விசாரணை

நான் வாசுதேவநல்லூர் கலைஞர் காலனியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு 3 மகன்கள் செல்வக்குமார், அஜித்குமார் மற்றும் ரஞ்சித் ஆவார்கள். செல்வக்குமாருக்கு திருமணம் ஆகிவிட்டது. அஜித் என்னுடன் இருக்கிறார். ரஞ்சித் இறந்துபோனார். செல்வக்குமார் வெளிநாடு செல்வதற்காக பொங்கல் செல்வம் என்பவரிடம் ரூ.1,00,000/-கொடுத்திருந்தேன். அவர் வெளிநாட்டிற்கு அனுப்பவில்லை எனவே அந்த பணத்தை வாங்குவதற்காக நானும் ரஞ்சித்தும் வாசுதேவநல்லூரில் உள்ள பிள்ளையார்கோவில் தெருவில் உள்ள பஞ்சாயத்தாரிடம் கூறுவதற்காக சென்றிருந்தோம். 7 வருடங்களுக்கு முன்னால் அவ்வாறு

சென்றிருந்தோம். சுமார் காலை 10 முதல் 10.30 க்குள் இருக்கும். அவ்வாறு பணம் வாங்குவதற்காக ரஞ்சித்தும் நானும் என் மகன் ரஞ்சித்தும் கலைஞர் காலனி பேருந்து நிறுத்தம் அருகில் சென்ற போது ரஞ்சித் என்னை வீட்டிற்கு செல்லும்படியும் அவர் பின்னர் வருகிறேன் என்று கூறி பேருந்து நிறுத்தத்தில் அமர்ந்திருந்தார். நான் சுமார் 10 அல்லது 20 நடை அளவிற்கு திரும்பிய போது மாரிச்சாமி என்பவர் என் மகன் ரஞ்சித்தை மாறி மாறி அரிவாளால் தலையிலும் கழுத்திலும் மாறி மாறி வெட்டினார். நான் என் மகன் அருகில் ஓடியபோது போகீறாய உன்னை வெட்டி கொல்லாவா என்று கூறினார். எதிரி காட்டிய அரிவாள் இன்று என்னிடம் காட்டப்படுவது தான். அதற்குள் அங்கு ஆட்கள் கூடிவிட்டார்கள். நான் அங்கேயே மயங்கி விழுந்துவிட்டேன். என் மகனை தீயணைப்பு வண்டியில் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தார்கள். என்னை என் வீட்டிற்கு தூக்கிச் சென்றுள்ளார்கள். நான் மயக்கம் தெளிந்தபின் வாசுதேவநல்லூர் காவல் நிலையத்திற்கு சென்றேன். அங்கு நான் புகார் கொடுத்தேன். என் மகனை திருநெல்வேலி மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக தெரிந்து கொண்டேன். புகார் கொடுத்தபின்னர்தான் அவரை திருநெல்வேலிக்கு கொண்டு சென்றார்கள். நானும் திருநெல்வேலிக்கு சென்றேன். நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் உள்ள ரேகை என்னுடையதுதான். நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1. ஆஜர் எதிரிதான் என் மகனை வெட்டிய நபர் ஆவார். அவர் பெயர் மாரிச்சாமி. என் மகன் ரஞ்சித் எதிரியின் மனைவி கவிதாவுடன் தகாத உறவில்

இருப்பதாக எதிரி கூறி என் மகன்மீது விரோதம் கொண்டிருந்தார். அதனால்தான் இந்த சம்பவம் நடந்துள்ளது. அதற்குமுன்பு பலமுறை எதிரி என் வீட்டிற்கு வந்து பலமுறை அவதூறான வார்த்தைகளால் என்னையும் என் மகனையும் திட்டினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களைத் தான் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் கூறினேன். 21.10.2017 அன்று எங்களுக்கு வரவேண்டிய பணத்தை வாங்குவதற்கு பஞ்சாயத்து பேசுவதற்காக சென்றோம். பஞ்சாயத்து பேச வரும்படி கூறியிருந்தார்கள் அதனால் சென்றோம். மேற்கண்ட விவரங்களை போலீசார் விசாரணையில் கூறவில்லை. நானும், ரஞ்சித்தும் போகும்போது பேருந்து நிறுத்தத்தின் அருகில் ரஞ்சித் நீங்கள் போங்கள் என்று கூறிவிட்டு நிழற்குடையில் அமர்ந்து கொண்டார். நான் அங்கிருந்து என் வீட்டிற்கு திரும்புவதற்காக நடந்தேன். 20 அடி நடந்த பின்னர் சத்தம் கேட்டுதான் திரும்பினேன். அந்த நேரத்தில் அங்கு 50 பேர் கூடிவிட்டார்கள் என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்தவுடன் மயங்கி விழுந்துவிட்டேன். என்னை வீட்டிற்கு தூக்கி சென்றார்கள். அதன் பிறகு தான் நான் வீட்டிலிருந்து மயக்கம் தெளிந்து காவல் நிலையம் சென்றேன். நான் காவல் நிலையம் செல்வதற்கு சுமாராக 2 மணி நேரம் ஆகிவிட்டது.  சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையம் சுமார் 2 பர்லாங் தொலைவில் இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து காவல்

நிலையத்திற்கு நடந்து சென்றால் 10 நிமிடத்தில் நடந்து சென்று விடலாம் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு மதியம் 3 மணிக்கு போனேன். அதன்பின்பு தான் வாக்குமூலம் கேட்டார்கள் எழுதிக்கொண்டார்கள். என்ன எழுதிக் கொண்டார்கள் என்று தெரியாது. அதன்பின்பு தான் திருநெல்வேலி மருத்துவமனைக்கு சென்றோம். சிவகிரியில் இருந்து திருநெல்வேலிக்கு என் மகனை கொண்டு சென்ற பின்னர் தான் நான் காவல் நிலையத்திற்கு சென்றேன். புகார் வாக்குமூலத்தில் நான் சம்பவ இடத்தில் மயங்கி விழுந்தேன் பின்னர் வீட்டிற்கு தூக்கி செல்லப்பட்டேன் மயக்கம் தெளிந்து காவல் நிலையம் வந்தேன் என்று போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். சம்பவம் பேருந்து நிழற்குடைக்குள் துவங்கியது. பேருந்து நிழற்குடைக்கு வெளியே முடிந்தது. ரஞ்சித் நிழற்குடையின் உள்ளே அமர்ந்து செல் பார்த்து கொண்டிருந்தார். அவர் அமர்ந்திருந்த நிலையில் தான் வெட்டுபட்டார். என் மகனின் முன்புறம் இருந்து வெட்டினார். அவர் அமர்ந்திருந்த இடத்திற்கு பின்புறம் உள்ள சுவர் இடையே 1 அடி இடைவெளி மட்டும் தான் இருக்கும் என்றால் சரிதான். அனைத்து வெட்டுகளும் என் மகனுக்கு நேர் எதிர் திசையில் வெட்டப்பட்டதாகும். கீழே விழுந்த பின்பு வெட்டி கொத்தி இழுத்து வந்தார். அவர் இழுத்த வந்த இடங்களில் எல்லாம் ரத்தக்காயம் காணப்பட்டது. என் மகன் அப்போது சட்டை அணிந்திருந்தார். அந்த சட்டையிலும் ரத்தம் பட்டிருந்தது வெட்டு பட்டிருந்தது. அந்த சட்டையை காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை. சிவகிரி மருத்துவமனையில் சட்டையை எடுத்துள்ளார்கள் அது

என்ன ஆனது என்று தெரியாது. நான் வீட்டிற்கு தூக்கி செல்லப்பட்ட பின்னர் காவல் நிலையம் செல்லும் வரை இடைப்பட்ட 3 மணி நேரமும் வீட்டில் தான் இருந்தேன். நான் காவல் நிலையம் சென்ற பின்னர் தான் கணேசன் காவல் நிலையத்திற்கு வந்தார். என் மகன் இறந்த தினத்தன்று கழுத்தில் தங்க செயின் அணிந்திருந்தார். மோதிரம் அணிந்திருந்தார். ஒரு பட்டன் செல்போனும், மற்றொரு டச் செல்போனும் வைத்திருந்தார். என் மகன் வெட்டுபட்டு கிடந்த இடத்தில் செயின், செல்போன்கள் காணப்படவில்லை. போலீசாரிடம் புகார் கொடுக்கும் போது என் மகன் அணிந்திருந்த செயின், மோதிரம், செல்போன்கள் பற்றிய விவரங்களை கூறவில்லை. நான் அந்த விவரங்களை சொன்னேன். ஆனால் அவர்கள் எழுதவில்லை. போலீசாரிடம் அந்த பொருள்கள் பற்றி கேட்ட போது அது பற்றி தெரியாது என்று சொன்னார்கள். செல்வகுமார் முன்னதாகவே பணம் வாங்குவதற்கு பிள்ளையார்கோவில் தெருவிற்கு சென்றுவிட்டார். அவர் புறப்பட்டு சென்று 1 மணி நேரம் கழித்து தான் நானும், ரஞ்சித்தும் புறப்பட்டோம். செல்வகுமார் என் வீட்டில் இருந்து தான் புறப்பட்டார். செல்வகுமார் என் வீட்டில் இருந்து 1 மணி நேரத்திற்கு முன்னதாகவே பிள்ளையார் கோவில் பஞ்சாயத்திற்கு பணம் வாங்க புறப்பட்டு சென்றார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன். அஜித் கேள்விபட்டு தான் தெற்கு நோக்கி வந்துள்ளார். சம்பவ இடத்தில் ரஞ்சித் எதுவும் பேசவில்லை சுயநினைவு இல்லை. அதன் பின்பு அவருக்கு சுயநினைவு வந்ததா என்று எனக்குத் தெரியாது. நான் கூறுவது போல் 21.10.2017 ம் தேதி காலை

10.30 மணிக்கு என் மகனை எதிரி வெட்டியதாக கூறுவதும் அதை நான் பார்த்தேன் என்று கூறுவதும்  பொய் என்றால் சரியல்ல. அன்றைய தினம் மதியம் 2.45 மணிக்கு வாசுதேவநல்லூர் காவல் நிலையம் சென்று நான் புகார் வாக்குமூலம் கொடுத்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. என் மகன் வெட்டுபட்டு இறந்ததாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.சம்பவ இடத்தின் அருகில் நான்கு புறமும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். ரஞ்சித் நான் சிறிது நேரம் செல் பார்த்து விட்டு போகிறேன் ஒரு ஆளை பார்க்க வேண்டும் நீ வீட்டிற்குபோ என்று சொன்னார். யாரைப் பார்க்கப் போகிறாய் என்று நான் கேட்கவில்லை. யாரைப் பார்க்க போகிறாய் நானும் காத்திருக்கிறேன் என்று நான் அவரிடம் கூறவில்லை. என் வீடும் சம்பவ இடமும் சுமார் 100 அடி இடைவெளியில் இருக்கும். சம்பவ இடத்தில் ரஞ்சித் குமாரை விட்டு 10 நிமிடம் கழித்து தான் புறப்பட்டேன். வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் நடந்து வந்தால் 3 நிமிடத்தில் வந்து விடலாம். அந்த இடத்தை சுற்றி உள்ளவர்கள் அங்குகூடிவிட்டார்கள் என்றால் நான் மயக்கம் அடைந்ததால் தெரியாது. சம்பவம் நடந்தததையே பக்கத்தில் உள்ளவர்கள் சொல்லிதான் தெரியும்.

**மறு விசாரணை** :   இல்லை